# 1. தமிழகத்தின் எல்லைகள்

பண்டைய தமிழகம் கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே அரபிக் கடலையும், தெற்சில இந்துமாக்கடலையும், வடக்கில் வேங்கிட மலையையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் மொழியின் தொன்மை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியம்,

"வடவேங்கடம் தென்குமரி

ஆயிடை தமிழ்கூறு நல்லுலகம்"

எனத் தமிழகத்தின் வட தென் எல்லைகளைக் குறிப்பிடுகிறது. கிழக்கேயும் மேற்கேயும் கடல்களே அமைந்திருந்தன என்பதை தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினயிர், "மேற்கும் கிழக்கும் கடலாதலின் எல்லை கூறாராயினர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"தென்குமரி வடபெருங்கல்

குணகுட கடலா எல்லை"

என புறநானூறும், மதுரைக் காஞ்சியும் தமிழகத்திற்கான எல்லைகளை வரையறை செய்கின்றன. வேங்கிடத்திற்கு வடக்கே தெலுங்கு மொழி பேசப்பட்டதை அகநானூறு கட்டுகிறது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "நன்னூல்" தமிழகத்தின் மேற்கெல்லையை, குடநாடு என்று குறிப்பதைக் காணமுடிகிறது.

மலையாள மொழியின் தோற்றத்தோடு அரபிக்கடலை மேற்கு எல்லையாகக் கொண்டிருந்த தமிழகம் பரப்பளவில் சுருங்கியது. மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரே (Western Ghates) தமிழகத்தின் மேற்கு எல்லை ஆனது.

தெற்கு எல்லையைப் பொருத்தமட்டில் இன்றைய குமரி மாவட்ட நிலப்பரப்பின் தொடர்ச்சியாக தெற்கிலும், கிழக்கிலும் பெரும் நிலப்பரப்பு இருந்ததாகவும், அதனை கடல் கொண்டதாகவும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. லெமூரியா (Lemuria) என்றழைக்கப்படும் அந்நிலப்பரப்பு குறித்து ஆய்வாளர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. வங்கக் கடலே தமிழகத்தின் கிழக்கு எல்லையாக உள்ளது. மூன்று பக்கங்களில் கடல்களையும், ஒரு பக்கம் நிலப்பரப்பையும் எல்லைகளைாகக் கொண்ட தமிழகம், ஒரு தீபக்றபமாக உள்ளது.

## மலைகளின் தாக்கம்:

தமிழ்நாட்டின் கிழக்குப் பக்கத்தில் கிழக்குத் தொடர்ச்சி மயலயம், மேற்குப்பக்கம் மேற்கு தொடர்ச்சி மலையும் உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலையில் சவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்ராயன் மலை, கொல்லிமலை போன்றவைகள் உள்ளன. இந்த மலைகளில் "நைஸ்பாறை" என்ற ஒரு வகைப் பாறை உள்ளது. இந்த பாறையில் "மாக்னசைட்" என்ற ஒரு கனிப்பொருள் உள்ளது. இது கற்கால மனிதர்களை கல் ஆயுதங்களை தயாரித்து கொள்ள காரணமாக இருந்தது. மேலும் இந்த பாறைகள் குகைக் கோயில் கலைக்கட்டவும், "திராவிடக் கலை" பாரம்பரியத்தை உருவாக்கவும் காரணமாக இருந்தது.

## நதிகள்:

தமிழ்நாட்டில் தென்பெண்ணை, பாலாறு, காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகள் பாய்கின்ற. 760 கி.மீ. நீளமுள்ள காவிரி தவிர பிற ஆறுகளில் சிறிது காலமே நீர் ஓடும். அதனால் வளத்தையும், பஞ்சத்தையும் பார்த்த தமிழரிடம் சகிப்புத் தன்மை வளர்ந்தது. இந்நதிகளின் கரைகளில் தமிழர் நாகரிகம் வளர்ந்தது. தமிழ்நாட்டில் பொதிகை மலையில் தோன்றி, தமிழ் நாட்டிலேயே கடலில் கலக்கும் ஆறுகளான வைகையும், தாமிரபரணியும் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறுகளின் குறுக்கே அணை கட்டி நீர்ப்பாசனம் செய்வதுடன், மின்சாரத்தை உற்பத்தி செய்து தொழில் வளர்ச்சிட பெறுவதிலும் தமிழ்நாடு சிறப்புற்று விளங்குகிறது.

இவை தவிர குடமுருட்டி, வைப்பாறு, வெட்டாறு, மஞ்சளா, பெரியாறு, வெள்ளாறு, கோதையாறு, மணிமுத்தாறு ஆகிய சிற்றாறுகளும் தமிழ்நாட்டை ஓரளவு வளப்படுத்துகின்றன.

## சங்ககால காடுகள்:

சங்க காலத்தில் நிலப்பரப்பில் பாதிக்கும் மேல் காடுகளே இருந்தன. அவைகளில் முள்ளூர் கானம், உம்பற்பெருங்காடு, புல்லியக்கோடு போன்றவைகள் முக்கியமானவைகளாகும்.

காடுகள் பகுதி சங்ககாலத்தில் "முல்லை" என்று அழைக்கப் பட்டது. இந்தக் காடுகள். சங்க காலத் தமிழர்களின் ஒரு பிரிவினரை "ஆயர்களாக" ஆக்கி வைத்தது. பசுமையான புல் வெளியும், தண்ணீரும் இக்காடுகளில் இருந்ததால், இங்கு கால்நடைப் பொருளாதாரம் (Pastoralism) தோன்றியது. மக்கள் மாடுகளைச் செல்வமாகக்

கருதினார். தனியார் சொத்துரிமை இங்கு தோன்றி வளர்ந்தது. ஆண் மேலாதிக்க சமூகம் (Partiarchy) தோன்றவும் இக்காடுகள் காரணமாயின. இந்த காடுகள் தாம் தமிழர்களின் நாகரீகம் தோன்ற காரணமாயிருந்ததென்று பி.டி.சீனிவாச அய்யங்கார் கூறுகிறார்.

## ஏரி, குளம் உருவாதல்:

தமிழ்நாட்டு ஆறுகளில் எப்போதும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதில்லை. ஆகையால் தமிழ் நாட்டு மக்கள் ஏரி, குளம், வெட்டுவதில் கவனம் செலுத்தியிருந்தனர். மதுராந்தகன் ஏரி, மாமண்டூர் ஏரி, மகேந்திரவாடி ஏரி, மற்றும் வீர நாராயணப் பேரேரி போன்றவைகள் நீர்பாசனத் திட்டத்திற்காக ஏற்பட்டவைகளே யாகும்.

## பருவகாலங்கள்:

தமிழ்நாட்டில் தட்ப வெப்பநிலை மழை, காற்று, ஓரே சீராக இல்லை. இதனால் பல பருவகாலங்கள் ஏற்பட்டன. அவைகள் மழைக்காலம், குளிர்காலம், முன் பனிக்காலம், பின் பனிக்கலாம், இள வேனில் காலம், முதுவேனில் காலம் போன்றவைகளாகும்.

## தமிழர்களின் வாழ்க்கை:

பருவகாலத்திற்கேற்றாற்போல, சங்ககாலத் தமிழர்கள் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். குளிர்காலத்திலும், பனிக்காலத்திலும், தமிழர்கள் போர் செய்வதில்லை. இந்த காலங்களில் அவர்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர். மற்ற காலங்களில் பணம் சம்பாதிக்க வெளி இடங்களுக்குச் சென்றனர். மழைக்காலத்திற்குள் வீடு திரும்பினர்.

## நாகரிகத்தின் நாற்றாங்கால்

தமிழ் நாட்டின். செழிப்பான பகுதி சமவெளிப் பகுதி அல்லது கழிமுகப் பகுதி (Delta Region) ஆகும். ஆற்றங்கரையில் நாகரிகங்கள் தோன்றியதாகக் கூறப்படுகிறது. பாலாற்றங்கரையில் பல்லவர் பேரரசும், காவிரிக் கரையில் சோழர் பேரரசும், வைகைக் கரையில் பாண்டியர் பேரரசும் தோன்றின. எனினும், சமவெளி அல்லது கழிமுகப் பகுதி முழுவதும் செழிப்பாக இருந்தது என்று கூறுவதற்கில்லை. அதற்குக் காரணம் ஆற்று வண்டல் பகுதி அடங்கிய சம பூமியின் ஒரு பக்கம் டசெழிப்பாகவும், ஆற்றப் பாய்ச்சல் அற்ற வளமற்ற பகுதி அடங்கிய சம பூமியின் ஒரு பக்கம் செழிப்பாகவும், ஆற்றுப் பாய்ச்சல் அற்ற வளமற்ற பகுதி வளமற்றும் இருந்தன. வறண்ட பகுதியில் மண் வளமும், மழை வளமும் இன்மையால் அங்கு தொழில்கள் பெருக வாய்ப்பில்லாமல் போயிற்று, வறுமைக்கும் வழி ஏற்பட்டது. பொதுவாக சமவெளிப் பகுதிகள்செழிப்பாக இருப்பதாலும், பொருள் உற்பத்தி அதிகமாக இருப்பதாலும் அங்கு வாழும் மக்களிடையே செல்வமும், பண்பாட்டுச் சிறப்பும் உள்ளன. அவர்களால் போர்களின் விலையைக் கொடுக்கவும், நாகரிகத்தின் பாரத்தைச் சுமக்கவும் முடிந்தது.

## மலைப் பகுதி மன்னர்கள்

முற்காலத் தமிழ் நாட்டில் குன்றுகளும், மலைப் பகுதிகளும் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்வதற்கேற்ற இடங்களாக இருந்தன. இவை அவர்கள் சுதந்திரமாக ஆட்சி செய்யவும் வழிவகுத்தன. பறம்பு மலையைப் பாரியும், பழனி மலையைப் பேகனும், கோடை மலையை வேட்டுவனும், பொதிகை மலையை ஆயும், குதிரை மலையை அதியமானும், கொல்லி மலையை ஓரியும், தோட்டி மலையை பெருநள்ளியும் ஆண்டு வந்தனர். குறுநில மன்னர்கள் எழுவரும் முடியுடை மூவேந்தர் ஆதிக்கத்துக்கு

உட்படாமல் சக்கரத்துக்குள் சக்கரங்களாகச் சுழன்று வந்தனர். பழந்தமிழர்கள் ஒன்று படாமல் நெல்லிக்கனிகளைப் போன்று தனித்தனி அரசியல் சமூகங்களாகப் பிரிந்து பிணங்கி வாழ்ந்ததற்குப் புவியியல் அமைப்பே அடிப்படைக் காரணம் எனலாம்.

## தமிழகத்தின் புவியியல் கூறுகள்

இந்திய தீபகற்பத்தின் தென்கோடியில் அமைந்துள்ள தமிழ்நாடு, இந்தியாவின் பதினோராவது பெரிய மாநிலமாகும். இந்தியாவின் மொத்த பரப்பளவில் நான்கு சதவீதத்தை, அதாவது 1,30,058 ச.கி.மீ. பரப்பளவை தமிழ்நாடு கொண்டுள்ளது. வடக்கு அட்சரேகையில் $8.5^0$ யை தென் எல்லையாகவும், $13.35^0$ யை வட எல்லையாகவும், கிழக்கு மேற்காக கிழக்கு தீர்க்க ரேகையில் $76.15^0$ மேற்கு எல்லையாகவும், $80.20^0$ கிழக்கு எல்லையாகவும் அது பெற்றுள்ளது.